# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 36/2020 நாள்.17.2.2026

## DW1- திரு.ஜெயபிரகாஷ் , த/பெ. திரு.சேகர்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி அசோக்குமாரிடம் பணம் கடன்வாங்கியது உண்மை என்றால் ஆமாம். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 10 லட்சம் ரொக்கமாக வாங்கியதற்கு குறிப்பு எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. வாதி இந்த வழக்கு போடுவதற்கு முன்பு ஒரு அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நான் வாதியிடம் வாங்கியது 17.12.2017 இல் ரூபாய் 62 லட்சம் என்றால் இல்லை. நான் 10 லட்சம் கடன்வாங்கியதாக சொல்லுவது 2017 டிசம்பர் மாதம் முதல் வாரம் என்றால் ஆமாம். ஆனால் நான் வாங்கியது மொத்தம் 62 லட்சம் என்றும், அதை குறைத்து 10லட்சம் என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 17.12.2017இல் 62லட்சம் வாங்கியதற்கு நான் குறிப்பான ஆவணம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 இல் உள்ளது என்னுடைய கையெழுத்து என்றால் இல்லை. நான் போட்ட எதிருரையில் வா.சா.ஆ.1இல் உள்ள கையெழுத்து அல்ல என்று மறுத்துள்ளேனா என்றால் இல்லை. நிரூபணவாக்குமூலத்திலும் அதை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்க அவ்வாறு சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்துறையில் புகார் கொடுத்ததாக சொல்லுகிறேனே அது எங்கு கொடுத்தேன் என்றால் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். அந்த புகார் நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வாதியிடம் வாங்கிய கடனை ஒப்புகொள்கிறேன் என்றும், தொகையை குறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட தொகையான 62லட்சம் கடன் வாங்கினேன் என்றும் அதை மறுத்து சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் மார்ச் 2018 ரூபாய் 20லட்சம் வாதியிடம் பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் ஆமாம். அவ்வாறு கொடுத்ததற்கு என்னிடம் ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் கடன் வாங்கியதை ஒப்புகொண்டு பணம் திருப்பி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்வதுபோல் 2018இல் வாதியிடம் பல்வேறு வகையில் தொகை வாங்கியது உண்மை என்றால் சரியல்ல.நான் வாதியிடம் காசோலை

கொடுத்ததையும், கடனுறுதி சீட்டு கொடுத்ததையும் ஒப்புகொள்கிறேன் என்றால் ஆமாம். வாங்கிய கடனுக்காக அவைகளை கொடுத்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி ஆவணம் வாதிக்கு எழுதி கொடுத்துவிட்டு தற்போது மாற்றி சொல்வது சரியல்ல என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள உரிய தொகையை நான் வாதிக்கு கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.17 15:59:45 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.